ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ ஜூலை. 28, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 294 ❖ ரூ.10

## நாடாளுமன்றம்- எதிர்க்கட்சியினர் எதையும் கேட்கத் தயாராக இல்லை

# அதிருப்தி

## தேசநலன் என்று வரும்போது அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு நாம் தேசநலனை பார்க்க வேண்டும்: வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர்

**புதுடெல்லி, ஜூலை. 28–**

எதிர்க்கட்சிகள் எதையும் கேட்கத் தயாராக இல்லை என்று குற்றம்சாட்டியுள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், அவையில் எதிர்க்கட்சிகளின் நடத்தைக்கு அதிருப்தி தெரிவித்துள்ளார்.





வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த மாதங்களில் வெளியுறவுத் துறை அமைச்சகம் மேற்கொண்ட வளர்ச்சிகள் குறித்து நேற்று மாநிலங்களவையில் உரையாற்றினார். அவரின் உரையின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் மோடி அறிக்கை அளிக்க வேண்டும் என்று முழக்கங்கள் எழுப்பினர். மாநிலங்களவையில் நிலவிய இந்த அமளியால் அதிர்ச்சி அடைந்த ஜெய்சங்கர், "எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதையும் கேட்க மறுப்பது அதிருப்தி அளிக்கிறது. இது நாட்டின் எந்த ஒரு சாதனையையும் அவர்கள் விமர்சிக்க மட்டுமே விரும்புகிறார்கள் என்பதையே காட்டுகிறது.

வெளியுறவுக் கொள்கை என்பது நாம் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து செயல்படும் ஒரு விஷயம். நாட்டுக்குள் நாம் எந்த வகையான விவாதங்களும் ஈடுபடலாம். ஆனால் நாட்டுக்கு வெளியே ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும். எதிர்க்கட்சிகளின் இன்றைய நடத்தை கவனிக்கப்பட வேண்டிய ஒன்ற., தேசநலன் என்று வரும்போது அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு நாம் தேசநலனை பார்க்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இந்தியாவின் பெருமைகளை அடுக்கி உரைத்துக் கொண்டிருந்தபோது, எதிர்க்கட்சியினர் பிரதமர் அவைக்கு வர வலியுறுத்தியும், மணிப்பூர் விவகாரம் பற்றி விவாதிக்க வலியுறுத்தியும் பேசினர். அப்போது என்டிஏ கூட்டணியினர் 'மோடி, மோடி...' என்று குரல் எழுப்ப, 'இண்டியா' கூட்டணியினர் 'இண்டியா, இண்டியா' என்று குரல் எழுப்பினர். இரு தரப்பினரும் முழக்கங்கள் எழுப்ப அவை அதிர்ந்தது.

அவைக்கு நேற்று இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் பலரும் கருப்புச் சட்டை அணிந்தும் அப்படியில்லாதோர் கையில் கருப்புத் துணி கட்டியும் வந்திருந்தனர். ஆம் ஆத்மி எம்.பி. ராகவ் சட்டா இது தொடர்பாக நாடாளுமன்ற வளாகத்தில் அளித்தப் பேட்டியில், "மணிப்பூர் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைகளுக்கு எதிராகவும், அங்கே நிகழும் காட்டுமிராண்டித்தனங்களைக் கண்டித்தும் இன்றைய தினம் இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் கருப்புச் சட்டை அணிந்து வந்துள்ளோம். இது ஓர் அடையாளப் போராட்டம். மணிப்பூர் மக்களின் துயரில் நாங்கள் துணை நிற்கிறோம் என்பதை நிறுவுகிறோம்" என்றார்.

வெளியுறவுத் துறை அமைச்சரின் உரையினைத் தொடர்ந்து மாநிலங்களவையின் சபைத் தலைவர் பியூஸ் கோயல் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கறுப்பு உடைகள் குறித்து விமர்சித்தார். அவர் கூறுகையில், "இவ்வளவு தீவிரமான விஷயத்திலும் அரசியல் செய்வது துரதிர்ஷ்டவசமானது. இது இந்தியாவின் கவுரவப் பிரச்சினை. சர்வேதச அளவில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்து வருவதைப் பற்றிய விஷயம்.

கருப்பு உடை அணிந்து வந்திருப்பவர்களால் வளர்ந்து வரும் இந்தியாவின் வலிமையை புரிந்துகொள்ள முடியாது என்று நான் நினைக்கிறேன். அவர்களின் கடந்த காலம், நிகழ் மற்றும் எதிர்காலம் கறுப்பானது. அவர்களின் வாழ்விலும் வெளிச்சம் வரும் என்று நம்புவோம்" என்று தெரிவித்தார்.

## 47 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உணவு உற்பத்தியில் சாதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



**திருச்சி , ஜூலை. 28–**

திருச்சியில் வேளாண் சங்கமம் விழாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இந்த விழா நாளை வரை 3 நாட்கள் நடக்கிறது. முதல் நாளான நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேளாண் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார். இதையடுத்து வேளாண் சங்கமம் தொடக்க விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: வேளாண் துறையை வளர்க்க நிதி மட்டுமல்ல நீர் வளமும் தேவை. வேளாண் துறையை வளர்க்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 6 ஆண்டுகளுக்கு பின் 119 லட்சத்து 96 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் உற்பத்திசெய்து சாதனை படைத்துள்ளது. 47 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உணவு உற்பத்தியில் சாதனை படைத்துள்ளது. உழவர்கள் நலனுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

ஏற்கனவே ஒன்றரை லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேலும் 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்படுகிறது. நலத்திட்டங்கள் சரியான பயனாளிகளை சென்றடைய நடவடிக்கை எடுத்து வருகிறோம். காய்கறிகள், பழங்கள் பயிரிடுவதை ஊக்குவித்து வருகிறோம். 10 ஆண்டு அதிமுக ஆட்சியில் 2.20 லட்சம் வேளாண் மின் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டன. 2 ஆண்டு தி.மு.க. ஆட்சியில் 1.5 லட்சம் வேளாண் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 3 புதிய அரசு வேளாண்மை கல்லூரிகள், தோட்டக்கலை கல்லூரி தொடங்கப்பட்டுள்ளன. அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து வளர நடவடிக்கை எடுத்து வருகிறோம். வேளாண் துறையை சிறந்த துறையாக அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாற்றி உள்ளார்.

வேளாண் துறை மிகப்பெரிய வளர்ச்சியை பெற்றுள்ளது. வேளாண் லாபம் தரும் தொழிலாக இன்றும் முழுமையாக மாறவில்லை. வேளாண்மையில் வருமானத்தை பெருக்க நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டும். உழவர்கள் உற்பத்தியாளர்களாக மட்டுமல்லாமல் விற்பனையாளர்களாகவும் மாற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## பொன்னமராவதி பேரூராட்சிப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகளை சட்டத்துறை அமைச்சர் ரகுபதி ஆய்வு செய்தார்

**பொன்னமராவதி , ஜூலை. 28–**

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேரூராட்சிப் பகுதிகளில், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை, சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா உடனிருந்தார்.



பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது; முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏழை, எளிய பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில், பொன்னமராவதி பேரூராட்சிப் பகுதிகளில், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி, பொன்னமராவதி பேரூராட்சியில், அம்ரூத் 2.0 திட்டம் மூலம் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அமரகண்டான் ஊரணி மேம்படுத்தும் பணியினையும் மற்றும் ரூ.2.17 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாரச்சந்தை மேம்படுத்தும் பணியினையும் மற்றும் ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு, சிவன் கோவில் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ், ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை பணி முடிவுற்றுள்ளதை பார்வையிடப்பட்டது. எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்களை உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், உதவி செயற்பொறியாளர் ஜீவாசுப்பிரமணியன், பேரூராட்சி செயல் அலுவலர் கணேசன், பேரூராட்சி துணைத் தலைவர் வெங்கடேசன், உதவிப் பொறியாளர் செல்லமுத்து, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நாளை மணிப்பூர் செல்கிறது 'இண்டியா' எம்.பி.க்கள் குழு

**புதுடெல்லி, ஜூலை. 28–**

எதிர்கட்சிகளின் கூட்டணியான 'இண்டியா' சார்பில் எம்.பி.க்கள் குழு இரண்டு நாள் பயணமாக நாளை (ஜூலை 29) மணிப்பூர் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



மணிப்பூரில் பெண்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறை தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வேண்டும், நாடாளுமன்றத்தில் இந்த விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராடி வருகின்றன.

பிரதமர் நரேந்திர மோடி இதுவரை நாடாளுமன்றத்துக்கு வந்து விளக்கம் அளிக்காததால், அவரை விளக்கம் அளிக்க வலியுறுத்தும் விதமாக மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சார்பில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது. நோட்டீசை ஏற்றுக்கொண்ட சபாநாயகர், நம்பிக்கையில்லா தீர்மானத்தை மக்களவையில் எப்போது எடுத்துக்கொள்ளலாம் என்பது குறித்து ஆலோசித்து அறிவிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மணிப்பூர் மக்களைச் சந்திக்கும் நோக்கில் 'இண்டியா' கூட்டணி எம்.பி.க்கள் நாளை அம்மாநிலம் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் அவர்கள் மணிப்பூரில் இருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மணிப்பூர் விவகாரம் காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இன்றும் அமளி ஏற்பட்டு அவை நடவடிக்கை பாதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மணிப்பூரின் மக்கள் தொகையில் 53 சதவீதம் பேர் மைத்தேயி இனத்தையும், 40 சதவீதம் பேர் மலைகளில் வசிக்கும் நாகா மற்றும் குகி பழங்குடியினத்தையும் சேர்ந்தவர்கள். பள்ளத்தாக்கு பகுதிகளில் வசிக்கும் மைத்தேயி இனத்தவர்கள் தங்களுக்கும் பழங்குடியின அந்தஸ்து கோரியதில் அவர்களுக்கும் நாகா உள்ளிட்ட பழங்குடியினத்தவர்களுக்கும் இடையே கலவரம் மூண்டது. கடந்த 3 மாதங்களாக மணிப்பூரில் நடைபெற்று வரும் இதுதொடர்பான வன்முறை சம்பவங்களில் 160–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்பதுடன் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இதனிடையே குகி பழங்குடியினத்தை சேர்ந்த 2 பெண்களை ஆடையின்றி ஊர்வலமாக இழுத்துச் சென்ற சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்கு பல்வேறு கட்சியினரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். பல்வேறு நகரங்களில் இந்த சம்பவத்தை கண்டித்து மகளிர் அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்நிலையில், மணிப்பூரில் புதன்கிழமை ஏற்பட்ட வன்முறை சம்பவங்களில் பாதுகாப்பு படையினருக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. இதுகுறித்து அதிகாரிகள் கூறும்போது, "மணிப்பூரில் மியான்மர் எல்லைக்கு அருகில் உள்ள மோரேபஜார் பகுதியில் வன்முறையாளர் கள் ஒன்றுதிரண்டு அங்குள்ள வீடுகளை தீவைத்து எரித்தனர். காங்போக்பி மாவட்டத்தில்...: அதேபோன்று, காங்போக்பி மாவட்டத்தில் ஒரு கும்பல் பாதுகாப்பு படையினர் பயன்படுத்தும் வாகனங்களை தீயிட்டு கொளுத்தியது. இந்த சம்பவங்களில் இதுவரையில் உயிரிழப்பு எதுவும் ஏற்பட்டதாக தகவல் இல்லை.

திமாபூரிலிருந்து நேற்று சபோர்மெய்னாவுக்கு பேருந்து ஒன்று வந்துகொண்டிருந்தது. அப்போது, உள்ளூர்வாசிகள் சிலர் பேருந்தை நிறுத்தி வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று சோதனையிட்டனர். அதன்பிறகு, அந்த பேருந்தை சிலர் தீயிட்டுக் கொளுத்தினர்" என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இன்று

# 28-7-2023

புதிய ரோஜா மலரை முகர்வது மூக்கடைப்பை நீக்கும்.
சக வருடம் 1945 சிராவணம் 06

| சோபகிருது ஆடி 12 | JUL - FRI வெள்ளி | முஹர்ரம் 9 வளர்பிறை 209 / 156 |
|---|---|---|

வளர். தசமி 10.48 (கா. 10.25) அனுஷம் 38.46 (மா. 09.32) தியாஜ் 52.22 அகஸ் 31.11 சித்த 38.46 மேல் மரண. மதுரை மீனாட்சி சட்டத் தேரில் பவனி. இராமேஸ்வரம் ஸ்ரீநந்திகேசுவரர், அம்பாள் ஸ்ரீபர்வதவர்த்தினியம்மன் வெள்ளி யானை வாகனத்தில் பட்டணப்பிரவேசம்.

| | நல்லநேரம் | கௌ.நு.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.15-10.15 | 12.15-1.15 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை | 4.45-5.45 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; கடக லக்கனம் இருப்பு நா. 3 வி. 37; சந்திராஷ்டமம் பரணி கார்த்திகை; கரணம் : 1.30-3; சூரிய உதயம் : 6.02

செய்வன திருந்த செய்

இராசிபலன்: மேஷம் - ஆதாயம்; ரிஷபம் - அலைச்சல்; மிதுனம் - அசதி; கடகம் - குழப்பம்; சிம்மம் - வரவு; கன்னி - நட்பு; துலாம் - களிப்பு; விருச்சி - வெற்றி; தனுசு - லாபம்; மகரம் - புகழ்; கும்பம் - ஆசை; மீனம் - பரிவு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

அன்பை உணர மட்டுமே முடியும்.
ஒருபோதும் பார்க்க முடியாது.
அதேபோல் தான் எதையும்
நிரூபிக்க முயற்சி
செய்யாதீர்கள்!






# மணவிடுதி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் காமராசர் விருது பெற்று சாதனை



புதுக்கோட்டை, ஜூலை. 28–

புதுக்கோட்டை மாவட்டம் மணவிடுதி அரசு உயர்நிலைப்பள்ளியில் கடந்த 2021-22 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறப்பிடம் பெற்ற இரண்டு மாணவர்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா தமிழக அரசின் காமராசர் விருது வழங்கி சிறப்பித்தார். மணவிடுதி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் வே. அகிலாண்டேஸ்வரி மற்றும் செ. சுபிக்ஷா ஆகியோருக்கு காமராசர் விருது வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற காமராசர் விருது வழங்கும் விழாவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு மாணவர்கள் 15 பேருக்கும், பண்ணிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் 15 பேருக்கும் காமராசர் விருதிற்கான சான்றிதழ் மற்றும் காசோலை வழங்கி வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டார் மாவட்ட ஆட்சித் தலைவர் மெர்சி ரம்யா. பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.10,000 க்கான காசோலையும், மற்றும் பாராட்டு சான்றிதழும், பண்ணிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.20000 க்கான காசோலையும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மஞ்சுளா, புதுக்கோட்டை மாவட்டக் கல்வி அலுவலர் ரமேஷ் ஆகியோர் கலந்துக் கொண்டனர். காமராசர் விருது பெற்ற மாணவிகளுக்கு பள்ளியின் தலைமையாசிரியர் அருணாசலம், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் வடிவேல், பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் லெட்சுமி ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

# அடுத்த மாநில உள்விவகாரத்தில் தலையிட வேண்டாம் மிசோரம் முதல்வரை கேட்டுக்கொண்ட பிரேன் சிங்



மணிப்பூர் , ஜூலை. 28–

மணிப்பூர் மாநிலத்தில் கடந்த மே மாதம் 3-ந்தேதி தொடங்கிய வன்முறைய இன்னும் கட்டுக்குள் வரவில்லை. வன்முறை தொடர்வதால் அண்டை மாநிலங்களில் மணிப்பூர் மக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர். மணிப்பூரின் அண்டை மாநிலமான மிசோரமில் 13 ஆயிரம் பேர் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மிசோரமில் குகி-ஜோ பழங்குடியினர் ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாக ஒற்றுமை பேரணி நடத்தினர். இதில் அம்மாநில முதல்வர் ஜோரம்தங்கா கலந்து கொண்டார். இந்த பேரணியின் போது மணிப்பூர் முதல்வர் பிரேன் சிங் குறித்து அவதூறாக பேசப்பட்டுள்ளது. மிசோ பழங்குடியினருக்கு குகி-ஜோ பழங்குடியினர் மற்றும் மியான்மரின் சின் மக்களுடன் நல்ல தொடர்பு உள்ளது. 31 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சின் மக்கள் அகதிகளாக மிசோரம் மாநிலத்தில் உள்ள முகாமில் உள்ளனர்.

மிசோரம் மாநில முதல்வர் பேரணியில் கலந்து கொண்ட நிலையில், அடுத்த மாநில உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம் என மணிப்பூர் மாநில முதல்வர் பிரேன் சிங் தெரிவித்துள்ளார். இதுறித்து பிரேன் சிங் கூறியதாவது:- போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை அரசு மேற்கொள்ள தொடங்கியபோது, பதற்றம் உருவானது. மணிப்பூர் மாநிலத்தில் வாழும் குகி சமுதாயத்தினருக்கு எதிராக மணிப்பூர் அரசு செயல்படவில்லை. அனைத்து சம்பவங்களையும் மணிப்பூர் அரசு கண்காணித்து வருகிறது. மணிப்பூர் ஒருமைப்பாட்டை அழிக்க முயற்சி செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மணிப்பூர் மாநிலத்தில் அமைதியை சீர்குலைக்க நினைக்கும் வகையில் ஆயுதமேந்தியவர்களுக்கும் அரசுக்கும் இடையே சண்டை நடைபெற்று வருகிறது. எனக்கு எதிராக மிசோரம் பேரணியில் அவதூறு குரல் எழுப்பியது காட்டுமிராண்டி தனமானது. மற்றொரு மாநிலத்தின் உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம் என மிசோரம் மாநில முதல்வரை கேட்டுக்கொள்கிறேன். ஐரோப்பிய யூனியன் கள நிலவரம் தெரியாமல் தீர்மானம் நிறைவேற்றி, அதிகாரிகள் அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. இவ்வாறு பிரேன் சிங் தெரிவித்தார்.








புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கந்தர்வகோட்டை ஊராட்சி அரியாணிபட்டிஊராட்சி மற்றும் பல்லவராயன்பட்டி ஊராட்சிகளில் மத்திய குழுவினர் சுகாதார துறை சார்ந்த அரசு அலுவலகங்கள் தொடக்கப் பள்ளி கழிவறைகள் சமையல் கூடம் சுகாதார வளாகம் அங்கன்வாடி மையங்கள் அங்கன்வாடி மையங்களில் உள்ள கழிப்பறைகள் உறிஞ்சி குழி தனி நபர் கழிப்பறைகள் அங்காடி குப்பை பிரிக்கும் கூடாரம் மண்புழு உரக்கூடம் தூய்மை காவலர் பணி ஆகியவைகளை நேரில் சென்று ஆய்வு செய்தனர் அதனைத் தொடர்ந்து பொதுமக்களிடையே மத்திய சுகாதாரக் குழுவினர் சுகாதாரத்தை பற்றி எடுத்துக் கூறி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர் இந்நிகழ்ச்சியில் மத்திய சுகாதார குழுவினர் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊராட்சி செயலாளர்கள் தன்னார்வளர்கள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள்ஆகியோர் உடன் இருந்தனர்.

## அரியலூர் மாவட்டத்தில் ஆட்சி மொழிக் கருத்தரங்கம்

# மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா துவக்கி வைத்தார்



அரியலூர், ஜூலை.28–

அரியலூர் அரசுக் கலைக் கல்லூரியில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற ஆட்சி மொழிக் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்றது. அரியலூர் அரசுக்கலைக்கல்லூரியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆட்சி மொழிக் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றது, இக்கருத்தரங்கினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா பேசினார்.

தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில் மொழிப் பயிற்சி குறித்து அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளி முதுகலைத் தமிழாசிரியர் வே.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் கருத்துரை வழங்கினர், இக்கருத்தரங்கில் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் க.சித்ரா (மு.கூ.பொ), அரியலூர் அரசுக் கலைக் கல்லூரி முதல்வர் டோமினிக் அமல்ராஜ், வட்டாட்சியர் கண்ணன், அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சிங்கார சென்னைக்கு அழகூட்டும் ஒப்பனை அறைகள் தூய்மையான பராமரிப்பால் மக்களிடம் வரவேற்பு




சென்னை , ஜூலை. 28–

சென்னையில், மாநகராட்சி சார்பாக 800-க்கும் மேற்பட்ட கழிப்பறைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை பெரும்பாலும் வெளியூரில் இருந்து வந்து செல்வோரும், வாகன ஓட்டிகளும் பயன்படுத்தி வருகின்றனர்.

அதேபோல் மாநகராட்சியின் முக்கியமான பகுதிகளிலும் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருப்பதால், பொது மக்களுக்கு உதவிகரமாகவும் இருக்கின்றன. இவற்றில் தற்போது சுமார் 300 கழிப்பறைகள் சேதமடைந்த நிலையிலும், மறுசீரமைக்கப்பட்டும் வருகின்றன. மீதமுள்ள 500 கழிப்பறைகள் தினசரி பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

இந்நிலையில் அடுத்தக்கட்டமாக மாநகராட்சி சார்பில் மேம்படுத்தப்பட்ட 200-க்கும் மேற்பட்ட எலக்ட்ரானிக் கழிப்பறைகளை, சென்னையில் முக்கிய சாலையோரங்களிலும், பேருந்து நிலையங்கள் போன்ற பகுதிகளிலும் அமைத்தது. ஆனால் இவை நகரவாசிகளிடம் பெரிய வரவேற்பை பெறவில்லை. மேலும் இவை அடிக்கடி பழுதடைந்து வந்த நிலையில், தற்போது சென்னையில் வெறும் 60 எலக்ட்ரானிக் கழிப்பறைகள் மட்டுமே செயல்பட்டு கொண்டிருக்கின்றன.

இதையடுத்து மக்களுக்கு இடவசதியுடன் கூடிய புதிய ஒப்பனை அறைகளை மாநகரம் முழுவதும் அமைக்க கடந்த ஆண்டு சென்னை மாநகராட்சி திட்டமிட்டிருந்தது. அதன்படி, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.51.08 கோடி மதிப்பீட்டில் சென்னை மாநகரில் ஒப்பனை அறைகளை கட்ட கடந்த ஆண்டு மார்ச் மாதம் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டன. அந்த வகையில் இதுவரை சென்னை மாநகராட்சி பகுதிகளில் 250 புதிய ஒப்பனை அறைகள் கட்டப்பட்டுள்ளன.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மகளிர் விடுதலை இயக்கம் மாவட்ட செயலாளர் ஞானவள்ளி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மணிப்பூர் சம்பவத்தை கண்டித்து பிரதமர் மோடி பதவி விலக கோரியும், மணிப்பூர் மாநில முதல்வரை கைது செய்ய வலியுறுத்தியும் கோஷங்கள் எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான விடுதலை சிறுத்தை கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் பொதுப்பணித் துறை அதிகாரிகளை விமர்சித்து அலுவலக சுவரில் கடிதம் ஒட்டிய மேட்டூர் எம்எல்ஏ



சேலம் , ஜூலை. 28–

சேலம் பொதுப்பணித்துறை அதிகாரி களை விமர்சித்து பொதுப்பணித்துறை அலுவலக சுவரில் மேட்டூர் பாமக எம்எல்ஏ சதாசிவம் கடிதம் எழுதி ஒட்டியதால் சலசலப்பு ஏற்பட்டது.

சேலம் வட்ட பொதுப்பணித்துறை கட்டிடம் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அலுவலகத்துக்கு புதன்கிழமை காலை மேட்டூர் பாமக எம்.எல்.ஏ சதாசிவம் வந்தார். அங்கு மேற்பார்வை பொறியாளர், செயற்பொறியாளர் இல்லாததால், தனது லெட்டர் பேடில் 'அறிவிப்பு' என்ற தலைப்பிட்டு, அதை, அங்குள்ள கணக்குப் பிரிவு அலுவலக சுவரில் ஒட்டினார்.

அதில், சூப்பரின்டென்ட் இன்ஜினீயர், எக்ஸிகியூட்டிவ் இன்ஜினீயர் ஆகியோர் கடந்த 3 நாட்களாக அலுவலகம் வராமல், சொந்த வேலை சம்பந்தமாக அரசு காரை எடுத்துக் கொண்டு சென்று விட்டனர். போன் செய்தேன், எடுக்கவில்லை. ஆகவே, இவர்கள் மீது துறை வாயிலாக நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் மற்றும் மாநில (பொதுப்பணித்துறை) அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறேன், என்று எழுதி கையொப் பமிட்டிருந்தார்.

இதனிடையே எம்.எல்.ஏ சதாசிவம் வந்திருப்பதை அறிந்து, பொதுப்பணித் துறை மேற்பார்வை பொறியாளர் சண்முகம், செயற்பொறியாளர் மகாவிஷ்ணு ஆகியோர் வந்தனர். இந்நிலையில், அங்கு வந்த சேலம் மேற்கு தொகுதி பாமக எம்.எல்.ஏ அருள், மேற்பார்வை பொறியாளர் அறைக்கு சென்றுவிட்டு சிறிது நேரத்தில் திரும்ப வந்து, எம்எல்ஏ சதாசிவம் ஒட்டியிருந்த அறிவிப்பு கடிதத்தை கிழித்து எடுத்துச் சென்றார்.

தொடர்ந்து, மேற்பார்வை பொறியாளரை சந்தித்துவிட்டு, எம்எல்ஏ-க்கள் அருள், சதாசிவம் ஆகியோர் திரும்பினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் எம்எல்ஏ அருள் கூறுகையில், 'சதாசிவம் எம்எல்ஏ தனது தொகுதிக்கு 10 பள்ளிகளுக்கு வகுப்பறை கட்டிடங்கள் கேட்டிருந்தார். அதில் 2 மட்டுமே தற்போது வந்துள்ளது. மேலும் முக்கியமான 4 கட்டிடங்களை கேட்டிருந்தார். தமிழக முதல்வர் நிகழ்ச்சி உள்ளிட்டவற்றுக்காக அதிகாரிகள் வெளியே சென்றுவிட்டதால், ஒரு இடைவெளி ஏற்பட்டுவிட்டது. தற்போது, அவர் கேட்டிருந்த கட்டிடங்கள் அடுத்த பட்டியலில் சேர்க்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்' என்றார்.

தொடர்ந்து, எம்.எல்.ஏ சதா சிவம் கூறுகையில், 'மேட்டூர், குஞ்சாண்டியூர், கொளத்தூர் உள்ளிட்ட இடங்களில், வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட வேண்டியுள்ளது. 1924-ம் ஆண்டு கட்டப்பட்ட மேட்டூர் காவிரி பாலம், சுகாதாரத்துறை குடியிருப்பு ஆகியவை பழுதடைந்துள்ளன. இந்த கோரிக்கைகள் டெண்டரில் வரவில்லை.

எனவே, 3 முறை வந்திருந்தும் அதிகாரிகளை சந்திக்க முடியவில்லை. அதனால், கோபத்தில் இந்த மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டிய தாகிவிட்டது. அதிகாரிகள் 2 மாதத்துக்குள் மேட்டூர் தொகுதிக்கு வேண்டிய கட்டிடங்களை அமைச்சரிடம் தெரிவித்து, கட்டிக் கொடுப்பதாக தெரிவித்தனர்' என்றார்.

இது குறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, 'அலுவலகத்துக்கு செவ்வாய்கிழமை வந்திருந்தோம். சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும் பணிகளை கவனிக்க வேண்டியுள்ளது. நேற்று தருமபுரிக்கு சென்று கொண்டிருந்தபோது, எம்.எல்.ஏ வந்துள்ள தகவல் கிடைத்து, உடனே திரும்ப வந்துவிட்டோம். அவர் 20 பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கேட்டிருந்தார். அதில் 12 பள்ளிகளுக்கு ஒப்புதல் கிடைத்துவிட்டது. கட்டிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் தான் ஒதுக்கப்படுகின்றன' என்றனர்.

# ஆமை வேகத்தில் கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு திமுக அரசு மீது ஓபிஎஸ் சாடல்



சென்னை , ஜூலை. 28–

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு ஆமை வேகத்தில் சென்று கொண்டிருப்பதாக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற குறிக்கோளினை மனதில் நிலைநிறுத்தி, தமிழக மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்த ஜெயலலிதா வசித்த இடமான கோடநாடு பங்களாவினை திருக்கோயிலாக கருதியவர்கள் ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள். கோடநாடு பங்களா முதல்வரின் முகாம் அலுவலகமாக விளங்கியது.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, கோடநாடு பங்களாவில் 24-04-2017 அன்று நுழைந்த ஓர் அரக்கர் கூட்டம் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவலாளி ஓம்பகதூர் என்பவரை கொலை செய்து, மற்றொரு காவலாளி கிருஷ்ணபகதூர் என்பவரை படுகாயப்படுத்தி, ஒரு கொள்ளை சம்பவத்தை அங்கே நிகழ்த்தியது. இதன் தொடர்ச்சியாக ஜெயலலிதாவின் கார் ஓட்டுநராக இருந்த கனகராஜ், கோடநாடு பங்களாவில் கணினி பொறுப்பினை வகித்து வந்த தினேஷ், இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் குற்றம் சுமத்தப்பட்ட சயான் என்பவரது மனைவி மற்றும் மகள் உள்ளிட்டோர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளனர்.

இந்தக் கொடூரங்கள் நிகழ்ந்து ஆறு ஆண்டுகள் கடந்தும், இந்தக் கொலைக்கும், கொள்ளைக்கும், மர்ம மரணங்களுக்கும் காரணமான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படவில்லை. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு சென்னை உயர்நீதிமன்றத்தின் கண்காணிப்பில் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை கோரிய மு.க. ஸ்டாலின், தேர்தல் பிரச்சாரத்தின்போது ஆட்சிக்கு வந்த 90 நாட்களில் குற்றவாளிகளை கண்டறிந்து அவர்களை சட்டத்தின்முன் நிறுத்துவோம் எனக்கூறிய மு.க. ஸ்டாலின், இது தொடர்பான விசாரணையை உச்ச நீதிமன்றம் தொடர்ந்து நடத்த உத்தரவிட்டுள்ள நிலையில், ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இந்த வழக்கினை விரைந்து நடத்தாதது வியப்பை அளிக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் வழக்கு ஆமை வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது.

ஜெயலலிதா வாழ்ந்த கோடநாடு பங்களாவில் நடைபெற்ற கொலை, கொள்ளை வழக்கு விரைந்து நடத்தப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையாக இருக்கிறது.

எனவே, கோடநாடு கொலை, கொள்ளை மற்றும் அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற மர்ம நிகழ்வுகள் குறித்த வழக்கினை விரைந்து விசாரித்து, குற்றவாளிகளுக்கு தண்டனைப் பெற்றுத் தர உடனடி நடவடிக்கை எடுக்குமாறு திமுக அரசை வலியுறுத்தி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ஏற்கெனவே அறிவித்தபடி, 01-08-2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10-30 மணியளவில் தமிழகத்தில் உள்ள அனைத்து வருவாய் மாவட்டத் தலைநகரங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்" என்று அவர் கூறியுள்ளார்.

# புதியதாக கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் திறந்து வைத்தார்



செங்கல்பட்டு, ஜூலை,28

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அச்சரப்பாக்கம் ஒன்றியம் வெளியம்பாக்கம் கிராமத்தில் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் 11,15,000 ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி மையம் மற்றும் எலப்பாக்கம் பகுதியில் பேருந்து நிலையத்தில் காங்கிரட் தரை அமைக்க மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் 16 லட்சம் மதிப்பீட்டில் தரைத்தளம் அமைக்கப்பட்டது.

இவைகளை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். .ஆறுமுகம், மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல், இவர்கள் கலந்து கொண்டு கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி மையம் மற்றும் பேருந்து காங்கிரட் தரைத்தளம் இவர்களை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆனந்தமங்கலம் சுப்ரமணியம், அச்சரப்பாக்கம் பேரூர் செயலாளர் முருகதாஸ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர் ஆனந்த கிருஷ்ணன், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் வெளியாம்பாக்கம் ரமேஷ், ஒன்றிய இலக்கிய அணி இணைச் செயலாளர் பூங்காவனம், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் ரவிச்சந்திரன், ஒன்றிய எம்ஜிஆர் மன்ற செயலாளர் பன்னீர்செல்வம், மாவட்ட இலக்கிய அணி துணைச் செயலாளர் வெங்கடகிருஷ்ணன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் மோகன், அம்மா பேரவை நகர செயலாளர் முகமது இத்திரீஸ், எலப்பாக்கம் தாமோதரன்,மற்றும் அதிமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் இருபதாம் தேதி அதிமுக சார்பில் நடைபெறும் மதுரை மாநாட்டில் பொதுமக்கள் கலந்து கொள்ள அழைப்பு கடிதத்தினை செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் ஆறுமுகம் கட்சி நிர்வாகிகள் இடையே வழங்கினார்.

# அய்யனார்மேடு கிராமத்தில் இளம் பெண்ணை மானபங்கப்படுத்த முயற்சித்தவர் சிறையில் அடைப்பு

ஊத்துக்கோட்டை, ஜூலை28-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சிறுவாபுரி என அழைக்கப்படும் சின்னம்பேடு ஊராட்சியைச் சேர்ந்த அய்யனார்மேடு பகுதியில் வசித்து வருபவர் இளம் பெண் வள்ளிதெய்வானை (வயது27) ஆவார். இந்நிலையில்,இவர் நேற்று முன்தினம் மாலை இயற்கை உபாதையை கழிக்க சுடுகாடு பகுதியில் உள்ள மைதானத்துக்கு சென்றார்.

அப்பொழுது அய்யனார்மேடு பகுதியைச் சேர்ந்த பூ வியாபாரி நேதாஜி(வயது45) என்பவர் அங்கு சென்று இளம் பெண் வள்ளிதெய்வானையை தரக்குறைவான வார்த்தைகளால் பேசி கீழே தள்ளி மானபங்கம் செய்ய முயற்சி செய்தாராம். இதனால் அதிர்ச்சி அடைந்த இளம்பெண் நேதாஜியை தள்ளிவிட்டு விட்டு தப்பித்து வந்தாராம்.அப்பொழுது இளம்பெண்ணை வழிமறித்து நேதாஜி கொலை மிரட்டல் விடுத்தாராம்.

இந்த சம்பவம் குறித்து ஆரணி காவல் நிலையத்தில் இளம் பெண் வள்ளிதெய்வானை நேற்று புகார் செய்தார். எனவே,ஆரணி காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தலைமையில் போலீசார் வழக்கு பதிவு செய்து இச்சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்தனர்.

இதன் பின்னர்,நேதாஜியை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். பின்னர்,அவர் மீது வழக்கு பதிவு செய்து பொன்னேரி முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்து பொன்னேரி கிளை சிறையில் அடைத்தனர்.

# எடுத்துக்கட்டிசாத்தனூரில் மணிப்பூர் கலவரத்தை கண்டித்து கிறித்துவ கிராம நல கூட்டமைப்பு சார்பில் அமைதி பேரணி



தரங்கம்பாடி, ஜூலை- 28:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா எடுத்துக்கட்டிசாத்தனூரில் மணிப்பூர் கலவரத்தை கண்டித்து கிறிஸ்தவ கிராம நல கூட்டமைப்பு சார்பில் அமைதிபேரணி நடைபெற்றது. கத்தோலிக்க திருச்சபை பங்கு தந்தை அருளானந்தன் தலைமையில் நடைபெற்றது.

பேரணியில் சிஎஸ்ஐ கிறிஸ்தவ சபை தங்கதுரை டி எல் சி பங்குத்தந்தை சாம்சங், முன்னால் சட்டமன்ற உறுப்பினர் எம். எம்.சித்திக், திமுக ஒன்றிய செயலாளர் எம்.அப்துல்மாலிக், எடுத்துக்கட்டி ஊராட்சி மன்ற தலைவர் பைலட், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் உதயகுமார், ஆயப்பாடி ஜமாத் நிர்வாகி நூருல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர், கிறிஸ்தவ கிராம நல கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பால்ராஜ் வரவேற்று பேசினார்.

அமைதி பேரணியில் பாலூர், எடுத்துக்கட்டி, ஆயப்பாடி, மாங்குடி, கூத்தூர், சிதம்பரம் கோயில் பத்து, திருக்களாச்சேரி, காராம்பள்ளம், உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த கிருஸ்தவர்கள், பல்வேறு கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மணிப்பூர் கலவரத்தை கண்டித்து பதாகைகளை ஏந்தியபடி மணிப்பூரில் பெண்களை இழிவுபடுத்தும் சம்பவத்தை கண்டித்தும், கிருஸ்துவர்கள் தேவாலயங்கள் தாக்கப்படுவதை கண்டித்து மத்திய அரசு மணிப்பூர் மாநில அரசை கண்டித்தும் விரைந்து மணிப்பூர் மாநிலத்தில் அமைதி நிலவ வேண்டும் என்றும் எடுத்துக்கட்டிசாத்தனூர் கடைவீதியில் இருந்து ஆயப்படிகடைவீதி வரை மூன்று கிலோ மீட்டர் தூரம் வரை பேரணியாக சென்று பேருரை ஆற்றினர்.

இதில் டிபிஎம்எல் கல்லூரி முதல்வர் காபிரியல் காமராஜ், தரங்கம்பாடி கிறிஸ்துவ சபை அருள் சகோதரிகள் கூத்தூர் எடுத்துக்கட்டி ஆயர்பாடி ஜமாத்தார்கள்கிராமநாட்டாமை பஞ்சாயத்தார்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் ரோமியோ நன்றி உரையாற்றினார். பேரணிக்கு பொறையார் காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டினர்.

## இலட்சிவாக்கம் ஊராட்சியில் விலையில்லா தென்னங்கன்றுகள் மற்றும்

# பழமரக்கன்றுகளை பயனாளிகளுக்கு எம்.எல்.ஏ டி.ஜே.கோவிந்தராஜன் வழங்கினார்





ஊத்துக்கோட்டை, ஜூலை28-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், இலச்சிவாக்கம் ஊராட்சியில் கலைஞரின் அனைத்து கிராம வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் சார்பில் பயனாளிகளுக்கு இரண்டு தென்னங்கன்றுகளையும்-மானிய விலையில் வேளாண் இடுபொருட்களையும் ,தோட்டக்கலைதுறை சார்பில் பழமரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நேற்று காலை நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் பி.ஜே.மூர்த்தி தலைமை தாங்கினார். ஏ.வி. ராமமூர்த்தி, வி.பி.ரவிக்குமார், கே வி.லோகேஷ், சிவசங்கர், வனரோஜா, முரளி, ஜெயலலிதாசசிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டார். பின்னர், பயனாளிகளுக்கு இரண்டு தென்னங்கன்றுகளையும்-மானிய விலையில் வேளாண் இடுபொருட்களையும், தோட்டக்கலைதுறை சார்பில் பழமரக்கன்றுகளையும் வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

பின்னர், அவர் பேசியதாவது: நம்மாழ்வார் கூறியது போல் பசி இல்லாமல் ஆரோக்கியமாக வாழ சட்டமன்ற உறுப்பினரான எனது சொந்த நிதி ரூ.15 ஆயிரத்தை தோட்டக்கலை துறை அதிகாரிகளிடம் தற்போது வழங்குகிறேன். இதன்மூலம் இந்த ஊராட்சியில் உள்ள 300 பயனாளிகளுக்கும் ரூ.50 விலையிலான பழமரக்கன்றுகளை தோட்டக்கலை துறை அதிகாரிகள் வழங்குவார்கள். இந்தப்பழமரக்கன்றுகளை வளர்ந்து அவைபழங்களைத் தரும்போது நம்மாழ்வார் கூறிய கருத்துக்கு ஏற்ப அந்தப் பழங்களை உண்டு பசியை அவர்கள் போக்கிக் கொண்டு ஆரோக்கியமாக வாழ முடியும் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வோம் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில், பொதுக்குழு உறுப்பினர்கள்,மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வேளாண்மைதுறை மற்றும் தோட்டக்கலைதுறையைசேர்ந்த அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநிலத்தில் இரு தினங்களுக்கு முன்பு நடைபெற்ற மேல்நிலை எழுத்தர் தேர்வில் காரைக்கால் கோட்டுச்சேரியை சேர்ந்த மாணவி செல்வி, சவுந்தர்யா ராணி ஜோதி 62.5% விழுக்காடு மதிப்பெண் பெற்று புதுச்சேரி மாநிலத்தில் முதலாவதாக தேர்ச்சி பெற்றார்கள். இம்மானவி நேற்று காலை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள். உடன் இம்மானவியின் பெற்றோர்கள்.



சென்னை மணலி அரசு மேல்நிலைப்பள்ளியில் 3000க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் படித்து வருகின்றனர் இந்த பள்ளியில் தமிழக அரசின் சார்பில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா சட்டமன்ற உறுப்பினர் கேபி சங்கர் தலைமையில் நடைபெற்றது மண்டல குழு தலைவர் ஏ வி ஆறுமுகம் முதன்மை கல்வி அலுவலர் எஸ் மார்ஸ் முன்னிலை வகித்தனர் நிகழ்ச்சியில் மாணவ மாணவியருக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கே பி சங்கர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆகியோர் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினர் நிகழ்ச்சியில் கேபி சங்கர் எம்எல்ஏ பேசும் போது இந்தப் பள்ளியில் அதிக அளவு மாணவர்கள் படிப்பதால் கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர் எனது சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி நிதியை இதற்காக நான் ஒதுக்கி தருகிறேன் என்றார், நிகழ்ச்சியில் மாவட்ட கல்வி அலுவலர் இ.முருகன் மணலி மண்டல உதவி ஆணையர் ஆர் கோவிந்தராசு பள்ளி தலைமை ஆசிரியர் கி.திலக் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் எம் எஸ் நாகலிங்கம் மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் ஆர் டி மதன் திமுக நிர்வாகிகள் வழக்கறிஞர் வா முத்துசாமி கே பி சொக்கலிங்கம் சாலை டி. கணேசன் மு செல்வம் கலை கே சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாக காரைக்கால் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு முற்றுகை போராட்டம்





காரைக்கால், ஜூலை. 28-

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் 100 நாள் வேலையை 200 நாட்களாக மாற்றி நாள் ஒன்றுக்கு சம்பளம் 600 ரூபாய் உயர்த்தி வழங்க வேண்டும் என்ற வலியுறுத்தி அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாக பேரணி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலக முற்றுகை போராட்டம் நடைபெற்றது.

இதில் முன்னதாக காரைக்கால் புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கிய இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நேரு நகரில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலகம் வரை சென்று விவசாயிகள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்பொழுது 100 நாள் வேலையை 200 நாட்களாக மாற்றி நாள் ஒன்றுக்கு சம்பளம் 600 ஆக உயர்த்தி வழங்க வேண்டும், பல்லாண்டு காலமாக முடிக்கிடக்கும் ரேஷன் கடைகளை உடனே திறந்து அரிசி, கோதுமை உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருள்களும் மானிய விலையில் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் புதுச்சேரி மாநில தலைவர் வின்சென்ட் தலைமை தாங்கினார் சிறப்பு அழைப்பாளராக அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் துணைத்தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான லாசர் கலந்துகொண்டு பேரணியை துவக்கி வைத்தார் மேலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் தமீம் புதுச்சேரி மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தமிழ்ச்செல்வன் கலியபெருமாள் திவ்யநாதன் பாக்யராஜ் உள்ளிட்ட பெருந்திரளான விவசாய தொழிலாளர் சங்கத்தினர் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்

# முதல்வரால் புதியதாக திறக்கப்பட்ட சாலை மின் விளக்கு சரிவர எரியாததால் அதிகரிக்கும் விபத்துக்கள் காரைக்கால் யூனியன் பிரதேச போராட்ட குழுசார்பில் அறிக்கை

காரைக்கால், ஜூலை. 28

காரைக்கால் யூனியன் பிரதேச போராட்ட குழு. ஏ எஸ் டி அன்சாரிபாபு. பொதுச் செயலாளர் அறிக்கை ,காரைக்கால்வடக்கு தொகுதிக்கு உட்பட்ட கீழகாசாகுடி முதல் கோவில்பத்து வரை உள்ள மேற்கு டாக்டர் மு.கருணாநிதி புறவழிச்சாலையில் சுமார் 90 லட்சம் மதிப்பீட்டில் 5 எண்ணிக்கை கொண்ட HI MASS விளக்குகள் மற்றும் 84 எண்ணிக்கை கொண்ட LED மின்விளக்குகள் பொருத்தப்பட்டு கடந்த 3 தேதி அன்று புதிதாக அமைக்கப்பட்ட உயர் மின் விளக்கு கம்பம் மற்றும் தாழ்மின் விளக்கு கம்பங்கள் திறப்பு விழா நிகழ்ச்சியில் புதுச்சேரி முதல்வர் என் ரங்கசாமி கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

90 லட்சம் செலவு செய்தும் தற்போது புதிதாக அமைக்கப்பட்ட உயர் மின் விளக்குகளில் பாதிவிளக்குகள் எறியாமல் அங்கு மீண்டும் சமூக விரோத செயல்கள்,இரவு நேரங்களில் அவ்வழியில் பொது மக்கள் செல்ல அச்சப்படும் நிலை உருவாகி உள்ளது. இந்நிலையில் காரைக்கால் வார சந்தையில் தமிழ் நாடு திருவிடைமருதூரை சேர்ந்தவர்கள் வியாபாரம் செய்து விட்டு ஞாயிறு இரவு மினிவேனில் ஊர் திரும்பும் போது மேற்க் கண்ட மேற்கு புறவழிச்சாலையில் சென்றபோது அங்கு மின் விளக்குகள் எரியாத காரணமாக இருளில் சாலை மத்தியில் உள்ளதடுப்புசுவரில்மினிவேன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியாக மற்றொருவர் பலத்த காயமடைந்து உள்ளார்.

இந்த விபத்துக்கு மூலக் காரணம் மின் விளக்குகள் எரியாமல் இருள் சூழ்ந்து இருந்ததே ஆகும். இந்த விபத்திற்கும் உயிர் பலியாகியதற்கும் காரைக்கால் பொது பணித் துறை சாலை மற்றும் கட்டிடங்கள் பிரிவு நிர்வாகம் என்று குற்றம் சாட்டுகிறேன். முதல்வர் அவர்களை அழைத்து வந்து இரவு 10 மணிக்கு அரசு விழா நடத்திய பொதுப் பணித் துறை நிர்வாகம் முழுமையாக பணி முடியாமல் அரைகுறையாக இந்த விழா நடத்த அவசர கதியில் ஆர்வம் காட்டியது ஏன். முதல்வரை வைத்து விழா நடத்தி 22 நாட்கள் ஆகிவிட்டது. முழுமையாக மின் விளக்குகள் எரியவைக்கஎந்தஒருஆர்வமும் காட்டாமல் பொதுப் பணித் துறை காலம் கடத்தியதின் பின் விளைவு விபத்து ஏற்பட்டு ஒரு உயிர் பலியாகி உள்ளது. இதற்கு புதுச்சேரி அரசு தார்மீக பொறுப்பு ஏற்று உயிர் இழந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டும். படுகாயமடைந்தவர் சிகிச்சைக்கு அரசு பொறுப்பு ஏற்கவேண்டும்.பொதுப்பணித் துறை அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# சென்னை தீவுத்திடலில் என்னென்ன வரப்போகிறது? அமைச்சர் சேகர்பாபு விளக்கம்



சென்னை, ஜூலை,28

சென்னையின் மிக முக்கிய பகுதியில் அமைந்திருக்கும் தீவுத்திடலுக்கு சுற்றுலா பொருள்காட்சி நடக்கும் போது மக்கள் சென்று வந்திருப்பார்கள். அது பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் துப்பாக்கிப் பயிற்சி எடுக்கும் இடமாகவும், ஒரு காலத்தில் டேவிஸ் கோப்பைக்கான போட்டிகள் நடந்த பகுதியாகவும் இருந்திருப்பதாக வரலாறு கூறுகிறது.

ஆண்டுதோறும் இங்கு நடக்கும் சுற்றுலா பொருள்காட்சி என்றால், சென்னை மக்களுக்கு கொள்ளைப் பிரியம். ஆண்டில் ஒரு சில மாதங்கள் மட்டுமே இங்கு சுற்றுலா பொருள்காட்சி நடக்கும் என்பதால், கூட்டம் நிரம்பி வழியும்.

இந்த நிலையில்தான், சென்னை தீவுத்திடலில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.50 கோடி மதிப்பில் இயற்கை வனப்புடன் கூடிய நகர்ப்புற பொதுச் சதுக்கம் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.அதாவது, இங்கு தமிழக சுற்றுலா துறையால், சிப்பியைப் போன்ற கட்டட வடிவமைப்பில் நிரந்தர கண்காட்சி மையம், பட்டாம்பூச்சி கண்காட்சி, 18 ஏக்கரில் மிகப்பெரிய வாகன நிறுத்துமிடம், உணவகங்களைக் கொண்ட பகுதி, கடைகள், பொழுதுபோக்குப் பூங்கா என களைகட்டப்போகிறதாம்.

தீவுத்திடலின் இரண்டு பக்கங்களையும் இணைக்க நான்கு பாலங்கள் கட்டப்படுமாம். அதில் ஒன்று, லித்துவானியாவில் அமைந்திருப்பதைப் போன்ற கலைவேலைப்பாடுகளுடன் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று தளங்களுடன் 50 கடைகளைக் கொண்ட நிரந்தர கண்காட்சி மையம், நிகழ்ச்சிகளை நடத்த அரங்குகள் என அமையவிருக்கிறது. எவ்வளவுவிரைவாகமுடியுமோ அவ்வளவு விரைவாக இந்தப் பணிகள் செய்து முடிக்கப்படவிருக்கிறதாம்.

இந்த இடம் உருவாக்கப்பட்டுவிட்டால், மெரினா கடற்கரையில் ஒரே நேரத்தில் லட்சக்கணக்கானோர் குவிவது தடுக்கப்படும் என்றும், வருடத்தில் ஒரே ஒரு முறை நடக்கும் பொருள்காட்சியின்போது ஒரே இடத்தில் கூட்ட நெரிசல் ஏற்படுவதும் குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து அமைச்சர் சேகர்பாபு கூறுகையில், சென்னை தீவுத்திடலில் இயற்கை வனப்புடன் நகர்ப்புற பொதுச் சதுக்கம் அமைக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் ஆராய்ந்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சிஎம்டிஏ, சுற்றுலாத் துறை இணைந்து வெகுவிரைவில் இதற்கான பணிகள் தொடங்கப்படும். சென்னை தீவுத் திடலில் கூவமாற்றின் இருபுறமும் உள்ள 30 ஏக்கர் நிலப்பரப்பில் உலகத்தரத்தில் கண்காட்சிகள், பொழுதுபோக்கு அம்சங்கள், தங்கும் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் சுற்றுலாபயணிகளைக்கவரும் வகையில் நகர்ப்புற சதுக்கம் அமைக்கப்படவுள்ளது.

இந்தப் பணிகள் முழுமை பெற்றப்பிறகு பெருமளவில் சென்னை மாநகர மக்களுக்கும், வெளி மாநில, மாவட்ட சுற்றுலா பயணிகளுக்கும் பயன்படுகின்ற வகையில் இந்தப் பகுதி அமையும் என்றார்.

# காரைக்காலில் அமைச்சரிடம் விவசாயிகள் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளிப்பு

காரைக்கால், ஜூலை. 28-

காரைக்கால் விவசாயகல்லூரி (பாஜன்ங்கோ )வின் விழாவிற்கு வருகை தந்த வேளாண் துறை அமைச்சர் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் ஆகியோரை காரைக்கால் மாவட்ட விவசாயிகள் சார்பாகசந்தித்து கிழ்கண்ட கோரிக்கைகளை முன் வைத்தனர்

1. நிகழ் ஆண்டு காரைக்காலில் 1200 ஹெட்டரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட சூழலில் கோடையில் விட்டுவிட்டு பெய்த மழையால் பருத்திப்பயிர் செம்பேன் மாவு பூச்சிபோன்ற பூச்சிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு பருத்தி உற்பத்தி பெரிய அளவுக்கு பாதித்து உள்ளது மேலும் சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 120/= கொள்முதல் செய்யப்பட்ட பருத்தி இந்த ஆண்டு ரூபாய் 45. முதல் 50வரை மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது இதனால் காரைக்கால் மாவட்டத்தில் ஏறத்தாழ 1300 விவசாயிகள் பெரிதும் பொருளாதாரபாதிப்புக்கு ஆளாகி உள்ளனர் இதனை கருத்தில் கொண்டு புதுச்சேரி அரசு பயிர் காப்பிட்டுத் நிறுவனத்தை தொடர்பு கொண்டு பருத்திக்குரிய பயிர் காப்பீட்டு தொகையை குறைந்தபட்சம்ஹெட்டர் ஒன்றுக்கு ரூபாய் ஒரு லச்சம் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. புதுச்சேரி மாநில தொடக்க வேளாண்மை விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகள் பெற்ற கடன்கள் அனைத்தும் தள்ளுபடி என சட்டப்பேரவையில் முதல்வர் அறிவித்தும் கடந்த மூன்று ஆண்டுகளாக அந்தக் கடன் தள்ளுபடி ஆகவில்லை அதனால் கடந்த மூன்று ஆண்டுகளாக விவசாயிகளும் தொடக்க வேளாண்மைகூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலம் கடன் பெற முடியவில்லை மேலும்வேறுஎந்தவங்கிகளிலும் கூடகடன் பெற முடியாத நிலைமையில் விவசாயிகள் பெரும் மன வேதனையில் உள்ளனர். கண்டிப்பாக வரும் வேளாண்மை பணிக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் கடன் வாழங்கினால் மட்டுமே வருங்காலங்களில் சாகுபடி செய்ய முடியும் என்பதால்அதற்கானஅரசு ஆணையை உடனே வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. காலம் தவறி பெய்யத மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சட்டப் பேரவையில் முதல்வர் அறிவித்த நிவாரணத் தொகையை உடனடியாக வழங்கிடவேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

4. 2020..2021 பயிர் காப்பீட்டு தொகையில் விடுபட்டுப் போன 443 விவசாயிகளுக்குரிய பயிர் காப்பீடு தொகையை பயிர் காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து தாமதம் இல்லாமல் பெற்று தர அரசு ஆவணம் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது..

மேற்கண்ட கோரிக்கைகளை கேட்டுக் கொண்ட வேளாண் துறை அமைச்சர் இது சம்பந்தமாக முதல்வரிடம் பேசி நல்லபதில் பெற்று தருவதாகவும்.. விடுபட்டுப் போன பயிர் காப்பீடு தொகையை பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வும் விரைவில் அனைத்து கோரிக்கை யும் கிடைத்துவிடும் எனநம்பிக்கைதெரிவித்தார் என கூறப்படுகின்றது வேளாண்மை துறை அமைச்சர் விவசாயிகள் வரிச்சிக்குடி சோமு. நெடுங்காடு ராஜேந்திரன். ஐயப்பன். ஆனந்த். மற்றும் பல விவசாயிக்கள் சந்தித்தனர்.

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக்பள்ளியில் ஏபிஜே அப்துல்கலாம் நினைவு நாள் மலரஞ்சலி நிகழ்ச்சி



புதுக்கோட்டை, ஜூலை.28-

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வாசிப்போர் மன்றம் சார்பாக ஏபிஜே. அப்துல்கலாம் நினைவு நாளில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வாசிப்போர் மன்றம் சார்பாக டாக்டர் ஏபிஜே. அப்துல் கலாம் நினைவு நாளில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நேற்று பள்ளியின் வாசிப்போர் மன்றம் சார்பாக அப்துல்கலாம் திருவுருவப்படத்திற்கு மாணவர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் பள்ளியின் முதல்வர் தங்கம்மூர்த்தி கலந்து கொண்டு அக்னி நாயகர் அப்துல் கலாம் நினைவுகளை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார். இது போல தேச தலைவர்களின் பிறந்தநாள் மற்றும் நினைவுநாட்களில் நடத்தப்படும் நிகழ்வுகளால் மாணவர்களுக்கு தலைவர்களின் தியாகங்கள், வாழ்நாள் அனுபவங்களை அறிந்து கொண்டு வாழ்வில் முன்னேற வாய்ப்பாக அமைகிறது என்று குறிப்பிட்டார், ஏராளமான மாணவர்களும் ஆசிரிய பெருமக்களும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

# புளியங்குடியில் ஏபி.ஜெ. அப்துல் கலாமின் 8-வது ஆண்டு நினைவு நாளில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை



தென்காசி,ஜூலை.28-

தென்காசி மாவட்டம்- புளியங்குடியில் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி, அக்கினி சிறகுகளின் நாயகன், வருங்கால இந்தியாவின் தூண்கள் என மாணவர்களின் மீது நம்பிக்கை வைத்த கனவு மாமேதை, நாட்டின் முதுகெலும்பு மரங்களே என முழக்கமிட்ட ஏவுகணை நாயகன், பாரத ரத்னா, ஏபி. ஜெ. அப்துல் கலாமின் 8-வது ஆண்டு நினைவு நாளில் அப்துல் கலாம் அமைப்பின் தலைவர் பாக்கியராஜ், செயலாளர் சின்னராஜ், பொருளாளர் காந்தி ஆகியோர் தலைமையில், வாசுதேவநல்லூர் எம்எல்ஏ சதன் திருமலை குமார், புளியங்குடி நகர் மன்றத் தலைவி விஜயா சௌந்தரபாண்டியன் முன்னிலையில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் தொழிலதிபர் ஹரி, உதவும் கரங்கள் அமைப்பு சார்லஸ், அகிலா, திருமலை, பூர்ணிமா, அரசு நூலகர் முத்துமாணிக்கம், பத்திர சாகுல், நகர் மன்ற உறுப்பினர்கள் கவிதா, செந்தாமரை, காங்கிரஸ் நகரத் தலைவர் பால்ராஜ், பிஸ்மி பிராய்லர் பீர் முகமது கனி மொபைல்ஸ் உமர், மதிமுக நகர செயலாளர் ஜாகிர் உசேன், பரமானந்தா பள்ளி நிர்வாகி ஞானபிரகாசம், மற்றும் கலாம் அமைப்பு சார்ந்த சமூக நல ஆர்வலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# 6-ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா லட்சக்கணக்கான புத்தகங்களுடன் இன்று தொடங்குகிறது



புதுக்கோட்டை, ஜூலை.28-

6-ஆவது புத்தகத் திருவிழா லட்சக்கணக்கான புத்தகங்களுடன் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் இன்று (ஜூலை.28) எழுச்சியுடன் தொடங்குகிறது.

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து நடத்தும் 6-ஆவது புத்தகத் திருவிழா ஜூலை.28 முதல் ஆகஸ்ட் 6-ஆம் தேதிவரை புதுக்கோட்டை நகர்மன்றத்தில் நடைபெறுகிது. தமிழ்நாட்டின் முன்னணி பதிப்பகங்கள் மூலம் 120 அரங்குகளில் லடச்சக்கணக்கானபுத்தகங்கள் வாகர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

புத்தகத் திருவிழாவை முன்னிட்டு அனைத்து அரங்குகளிலும் வாசகர்களுக்கு சிறப்புக் கழிவுகளில் புத்தகங்கள் விற்கப்பட உள்ளன, பள்ளி மாணவர்களை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளையும் மாவட்ட நிர்வாகம் செய்துள்ளது. மாணவர்களுக்கு குறிப்பிட்ட பதிப்பகங்களில் கூடுதல் கழிவுகளும் வழங்கப்பட உள்ளன. இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் தொடக்க விழாவிற்கு மாவட்ட ஆட்சியரும், புத்தகத்திருவிழாக்குழுத் தலைவருமான ஐ.சா. மெர்சி ரம்யா தலைமை வகிக்கிறார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே முன்னிலை வகிக்கிறார், புத்தகத் திருவிழாவை மாநில சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

மாலையில் நடைபெறும் விழாவில் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், அறிவியல் இயக்க மாநிலத் தலைவர் எஸ்.தினகரன் ஆகியோர் உரையாற்றுகின்றனர். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், அறிவியல் இயக்கப் பொறுப்பாளர்கள் பங்கேற்க உள்ளனர். புத்தகத் திருவிழா இன்று தொடங்கவுள்ளதையொட்டி மாவட்ட ஆட்சியர் ஐ.சா.மெரிசி ரம்யா நேற்று அரங்குகள் அமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார், அவருடன் வட்டாட்சியர் எஸ். விஜயலெட்சுமி மற்றும் புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்றனர்.

## தென்காசியில் ஆய்குடி அமர் சேவா சங்க வளாகத்தில்

# இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை சார்பில் இலவச சித்த மருத்துவ முகாம்



தென்காசி,ஜூலை.28-

தென்காசி மாவட்டம் ஆய்குடி அமர் சேவா சங்க வளாகத்தில் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை சார்பில் இலவச சித்த மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த முகாமிற்கு மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் உஷா, தலைமையில் உதவி மருத்துவ அலுவலர் ஹரிகரன் (ஆயுர்வேதா) செல்வகணேஷ், தேவி, கோகிலா, செரின், .பாக்யஸ்ரீ, பயிற்சி மருத்துவர்கள் (சித்தா மற்றும் ஆயுர்வேதா), மருந்தாளுநர் நாகராஜன், ஜாகீர் உசேன், யோகா விரிவாளர் பாலசுந்தர், யோகா பயிற்சியாளர் ரகுராம், உள்ளிட்ட மருத்துவ குழுவினர் முகாமில் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் தசைஎலும்பு பாதிக்கப்பட்டவர்களுக்கும் முதுகுத்தண்டு பாதிக்கப்பட்ட மற்றும் 60 சதவீதத்துக்கு மேலாக உடல் ஊனமுற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு சித்த மற்றும் ஹோமியோபதி சிகிச்சை மூலமாக சிகிச்சை கொடுக்கப்பட்டது.

மேலும் ஆயில் மசாஜ் ஒத்தடம் கொடுத்தல் யோகாசனங்கள் அதேபோல கர்ப்பிணி தாய்மார்களுக்கு எந்த மாதிரியான உணவு உட்கொள்ள வேண்டும் எப்படி எல்லாம் யோகாசனம் செய்ய வேண்டும் உள்ளிட்டவைகளும் மருத்துவர்கள் எடுத்துரைத்தனர். இந்த முகாமில் சித்த மருத்துவ துறையின் மூலம் எளிய முறையில் குணப்படுத்தும் கருவிகளையும் மூலிகை செடிகளையும் கண்காட்சியில் வைத்தனர் இதை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டனர். இதுகுறித்து மருத்துவர்கள் கூறும்போது சித்த மருத்துவத் துறை சார்பாக மாற்றுத்திறனாளிகள் நலம் பெற வேண்டி தொடர்ந்து இது போன்ற சிறப்பு முகாம்களையும் நடத்தப்பட்டு அவர்களுக்கு இலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தனர்.

## மோடி 3-வது முறையாக பிரதமர் ஆக

# 'என் மண், என் மக்கள்' யாத்திரை உதவும் அண்ணாமலை நம்பிக்கை



மதுரை, ஜூலை.28-

ராமேஸ்வரத்தில் இன்று தொடங்கும் 'என் மண், என் மக்கள்' யாத்திரை பிரதமர் மோடி 3-வது முறையாக பிரதமராக உதவும் என பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "ராமேஸ்வரத்தில் 'என் மண், என் மக்கள்' யாத்திரையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நாளை {ஜீலை-28} தொடங்கி வைக்கிறார். தொடக்க விழா மட்டுமே நடைபெறும். ஜூலை 29-ல் யாத்திரை தொடங்கும். தமிழகத்தில் உள்ள 234 தொகுதிக்கும் யாத்திரை செல்லவுள்ளது. வெள்ளிக்கிழமை முதல் ஆகஸ்ட் 22 வரை நடைபெறும் முதல் கட்ட யாத்திரைக்கு பாஜக மூத்த தலைவர்கள் யாத்திரைக்கு தலைமை வகிப்பார்கள். முதல் கட்ட யாத்திரைக்கு முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார். மொத்தம் 5 கட்டங்களாக 168 நாட்கள் யாத்திரை நடைபெறும். மக்கள் வசிக்கும் பகுதிகளில் கால்நடையாகவும், மக்கள் வசிக்காத பகுதிகளில் வாகன யாத்திரையும் நடைபெறும். 1700 கிலோ மீட்டர் கால்நடையாகவும், 900 கிலோ மீட்டர் வாகனத்திலும் யாத்திரை நடைபெறும். ஜன.11-க்குள் முன்பு யாத்திரை முடிக்கப்படும். யாத்திரை நிறைவு நாள் பிரமாண்டமாக நடத்தப்படும்.

யாத்திரை தொடக்க விழாவுக்கு கூட்டணி கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி வருகை இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அவர் சேலத்தில் மருத்துவ சிகிச்சையில் உள்ளார்.

மோடியை 3-வது முறையாக பிரதமராக்க தமிழக மக்களின் ஆதரவை பெறும் நோக்கத்தில் இந்த யாத்திரை நடத்தப்படுகிறது. யாத்திரை தொடக்க விழாவில் மோடி என்ன செய்தார் என்ற புத்தகம் வெளியிடப்படும். சட்டசபை தொகுதி வாரியாக நிறைவேற்றப்பட்ட மத்திய அரசின் திட்டங்கள் குறித்த கையேடும் வெளியிடப்படும். இந்த யாத்திரை 3-வது முறையாக மோடி பிரதமராக பதவியேற்க நிச்சயம் துணைபுரியும். 10 இடங்களில் பொதுக்கூட்டம் நடத்தப்படும். இதில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்'' என்று அவர் கூறினார்.

# அரியலூரில் தொழில் மைய திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம்



அரியலூர், ஜூலை,28-

அரியலூரில் தொழில் மைய திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

அரியலூர் அன்னலட்சுமி ராஜபாண்டியன் திருமண மண்டபத்தில், மாவட்ட தொழில் மையம் சார்பில் நடத்தப்பட்ட சிறு மற்றும் குறு தொழில்கள் மேம்பாடு பற்றிய விழிப்புணர்வு கூட்டத்துக்கு, அரியலூர் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ஆ. லெட்சுமி தலைமை வகித்தார். அரியலூர் வணிகர் பேரமைப்பு மாவட்டத் தலைவர் கணேசன் வரவேற்று பேசினார். மாவட்ட வணிகர் சங்கத் தலைவர் ராஜ விஜயகுமார் முன்னிலை வகித்தார், மாவட்ட தொழில் மையத்தின் செயல்பாடுகள் மற்றும் அதன் மூலம் தொழில் முனைவோருக்கு கிடைக்க பெறும் நன்மைகள் குறித்து, அரியலூர் மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிலகள் சங்க பொருளாளர் தனஞ்ஜெயன் சிறப்புரையாற்றினார்.

அரியலூர் அறிவு ஜீவா அச்சக உரிமையாளர் செல்லபாண்டியன், பவன்டோ டீலர் விஜயகுமார், மாவட்ட தொழில் மைய நிர்வாகி சதீஷ், மற்றும் பாக்யராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர், முடிவில் மாவட்ட தொழில் மைய உதவி பொறியாளர் ஜனனி நன்றி கூறினார்.

# ஆலங்குடி அருகே அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்த விவசாயி பரிதாப பலி



ஆலங்குடி, ஜூலை. 28-

ஆலங்குடி அருகே தோட்டத்தில் அறுந்து கிடந்த மின்கம்பியில் இருந்து மின்சாரம் பாய்ந்து விவசாயி பரிதாபமாக உயிரிழந்தார்.

ஆலங்குடி அருகேயுள்ள அணவயல் பகுதியைச் சேர்ந்தவர் சக்திவேல்(50) விவசாயி. இவர், நேற்று காலை அப்பகுதியில் உள்ள அவரது தோட்டத்திற்கு சென்றுள்ளார், அங்கு அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் பாய்ந்து தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்தார். படுகாயமடைந்த சக்திவேலை அருகில் இருந்தவர்கள் மீட்டு பேராவூரணியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர், அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர், இதுகுறித்து வடகாடு போலீஸார் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே உள்ள சமத்துவபுரம் கோல்டன் சிட்டி நகரில் வசிப்பவர் காந்தி, இவர் தனது வீட்டின் முன்பு அமைக்கப்பட்டுள்ள கூரை கொட்டகையினுள் தனது வீட்டின் கட்டிட வேலைக்காக சிமெண்ட் மூட்டை அடுக்கி வைத்திருந்தார். நேற்று மாலை அதனை எடுக்கச் செல்லும் பொழுது உள்ளே ஒரு பெரிய சாரைப்பாம்பு இருப்பது தெரியவந்தது பதட்டம் அடைந்த காந்தி அருகில் இருந்தவர்களின் உதவியுடன் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த திருமயம் தீயணைப்புத் துறையினர் வெகு நேர போராட்டத்திற்கு பிறகு மூட்டைகளுக்குள் இருந்த ஐந்தரை அடி நீள சாரைப்பாம்பினை சாமர்த்தியமாக பிடித்தனர், பிடித்த சாரைப்பாம்பினை வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர், பின்னர் அது பாதுகாப்பாக வனப்பகுதிக்குள் விடப்பட்டது.

# புதுக்கோட்டையில் ஊதிய ஒப்பந்தக் கோரிக்கைகளை விளக்கி போக்குவரத்துத் தொழிலாளர்கள் பேரணி



புதுக்கோட்டை, ஜூலை.28-

போக்குவரத்துத் தொழிலாளர்களின் 15-ஆவது ஊதியஒப்பந்தக்கோரிக்கைகளை விளக்கி சிஐடியு தொழிற்சங்கம் சார்பில் புதுக்கோட்டையில் வாயிற்கூட்டம் மற்றும் பேரணி நடைபெற்றது.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வரவுக்கும் செலவுக்கும் இடைப்பட்ட தொகை அரசு கழகங்களுக்கு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைளை போக்குவரத்துத் தொழிலாளர்கள் அரசுக்கு எழுப்பி வருகின்றனர். இந்தக் கோரிக்கைகள் அடங்கிய 15-ஆவது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை அரசு உடனடியாகத் தொடங்க வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் சிஐடியு தொழிற்சங்கத்தின் சார்பில் நேற்று வாயிற்கூட்டம் மற்றும் பேரணி நடைபெற்றது.

புதுக்கோட்டை அரசுப் போக்குவரத்துப் பணிமனை முன்பாக நடைபெற்ற வாயிற்கூட்டத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழிய சங்கத்தின் புதுக்கோட்டை மண்டலத் தலைவர் கே.கார்த்திகேயன் தலைமை வகித்தார், கோரிக்கைகளை விளக்கி மண்டலப் பொதுச் செயலாளர் ஆர்.மணிமாறன் மற்றும் நிர்வாகிகள் பி.செந்தில்நாதன், எஸ்.சாமிஅய்யா, எம்.முத்துக்குமார், பி.லோகநாதன் உள்ளிட்டோர் பேசினர். சிஐடியு மாவட்டச் செயலாளர் ஏ.ஸ்ரீதர், பொருளாளர் எஸ்.பாலசுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர், வி.ஆனந்த் நன்றி கூறினார், பின்னர் புதுக்கோட்டை போக்குவரத்துப் பணிமனையிலிருந்து மண்டல அலுவலகம் வரை போக்குவரத்துத் தொழிலாளர்களின் பேரணி நடைபெற்றது.

# கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கற்றல் விளைவுகள் பயிற்சி



கந்தர்வகோட்டை, ஜீலை.28-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் 6,7,8 வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கற்றல் விளைவுகள் பயிற்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இப்பயிற்சியை வட்டாரக் கல்வி அலுவலர்கள் வெங்கடேஸ்வரி,நரசிம்மன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். கந்தர்வக்கோட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பொறுப்பு சசிக்குமார் முன்னிலை வகித்தார். வட்டார வளமைய மேற்பார்வையாளர் பிரகாஷ் அனைவரையும் வரவேற்றார்.

பயிற்சியில் தமிழ்,ஆங்கிலம்,கணிதம்,அறிவியல்,சமூக அறிவியல் என தொடர்ந்து மூன்று நாட்களாக நடைபெற்றது . பயிற்சியில் ஒவ்வொரு பாடத்திற்கும் கற்றல் விளைவுகள் மூலம் மாணவர்கள் எளிதாக கற்றுக்கொள்ள முடியும் என்றும், இப்பயிற்சியில் நிகழ்ச்சிநிரலாகமதிப்பீடுகளின் நோக்கம், தேசிய அடைவு ஆய்வு அடிப்படையிலான மதிப்பீடு, பாடநூல் வினாக்களுக்கும் தேசிய அடைவு ஆய்வுகளுக்கான வினாக்களுக்கான வேறுபாடுகள், புளுமின் வகை பிரித்தல், திறன் அடிப்படையிலான கேள்விகளை உருவாக்குவதற்கான படிகள், மாணவர்கள் என்ன புரிந்து கொண்டார்கள் என்பதையும் பார்க்கவும், மாணவர் முன்னேற்றத்தை கண்டறிதல், மாணவர்களுக்கு கடினமான பகுதி என்பது எது என்பதை அறிந்து கொள்ளுதல் அறிந்து கொண்டு மீண்டும் கற்பித்தல் வேண்டும் என பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் கருத்தாளர்களாக தமிழ் பாடத்திற்கு ஆசிரியர்கள் தியாகராஜன், உஷா, ஆங்கிலம் மெட்டில் டா பெட்ரி, ஆனந்தராஜ், கணக்கு சகாயமேரி,லெட்சுமி, அறிவியல் மேரிபுஷ்பம்,திலகன் சமூக அறிவியல் சரவணன், ரமேஷ் ஆகியோர் கருத்தாளர்களாக செயல்பட்டனர், இப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஆசிரியர் பயிற்றுநர்கள் பாரதிதாசன், சங்கிலி முத்து , ராஜேஸ்வரி ஆகியோர் செய்திருந்தனர்.

# மணிப்பூர் சம்பவத்தை கண்டித்து தென்காசியில் காங்கிரஸ் சார்பில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம்



தென்காசி, ஜூலை.28-

மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடியின பெண்களை பாலியல் பலாத்காரம் செய்த கயவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தவறிய மணிப்பூர் மாநில பாஜக அரசை கண்டித்து தென்காசிபுதிய பேருந்து நிலையம் அருகில் காங்கிரஸ் சார்பில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம்நடைபெற்றதுஇந்த ஆர்ப்பாட்டத்திற்கு காங்கிரஸ் மாவட்டத் தலைவரும் தென்காசி சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.பழனி நாடார் தலைமை வகித்து துவக்கி வைத்தார்,மாவட்ட பொருளாளர் முரளி ராஜா முன்னிலை வகித்தார்.

இதில் மத்திய அரசை கண்டித்து மெழுகுவர்த்தி ஏந்தி பல்வேறு கண்டன கோஷங்கள் எழுப்பப் பட்டன. இந்நிகழ்ச்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் சிவகிரி திருஞானம், ஜேம்ஸ், செங்கோட்டை முத்துசாமி, சிவநல்லூர் சட்டநாதன், சுரண்டை நகர் மன்றத் தலைவர் வள்ளி முருகன், தென்காசி மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் உதய கிருஷ்ணன், மாவட்ட துணைத் தலைவர்கள் சிவராமகிருஷ்ணன், சண்முகவேல் மாவட்ட பொதுச்செயலாளர்கள் ஏஜி எம் கணேசன், காஜா மைதீன், மருத்துவர் சங்கர குமார், பொருளாளர் ஈஸ்வரன், இளைஞர் காங்கிரஸ் சந்தோஷ், காதர் மைதீன், சித்திக், கவுன்சிலர் பூமாதேவி, மாநில பேச்சாளர்கள் எஸ். ஆர் பால்துரை, ஆய்க்குடி பெரியசாமி, மகளிர் அணி தலைவி சேர்மக்கனி, வட்டாரத் தலைவர் பெருமாள், சிறுபான்மை பிரிவு சலீம், சுரண்டை தேவேந்திரன், பிரபாகரன், பிரபு, அரவிந்த், கந்தையா, சுந்தரபாண்டியபுரம் செல்வராஜ், தாயார் தோப்பு ராமர், கிளங்காடு மணி, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# பனவடலிசத்திரத்தில் திமுக இளைஞரணி சார்பில் இல்லம் தேடி உறுப்பினர் சேர்க்கை முகாம்



சங்கரன்கோவில், ஜூலை.28-

சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் பனவடலி சத்திரத்தில் வைத்து இல்லம் தேடி

இளைஞர் அணி உறுப்பினர் முகாம் நடைபெற்றது, ஒன்றியச் செயலாளர் பெரியதுரை தலைமை வகித்தார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் முகேஷ் ,துணை அமைப்பாளர்கள் சரவணன் ,ராயல்கார்த்தி ,ராஜ், ராஜராஜன், மணிகண்டன் ,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கார்த்திக் முன்னிலை வகித்தனர். இதில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்து ஆலோசனைகள் வழங்கினார்.

இதில் மாவட்ட பொருளாளர் சரவணன், ஒன்றிய அவைத் தலைவர் பரமையா, மாவட்ட பிரதிநிதிகள் சண்முகப்பாண்டியன், செந்தூர்பாண்டியன் ,தங்கதுரை ஒன்றியபொருளாளர் முத்துப்பாண்டியன், விளையாட்டு மேம்பாட்டு அணி மகாராஜன், மாவட்ட சிறுபான்மையினர் நல குழுத் தலைவர் மரியலூயிஸ் பாண்டியன், ஆதி திராவிடர் அணி ராஜ் என்ற கருப்பசாமி, தொண்டரணி கிருஷ்ணசாமி, கிளை செயலாளர்கள் காசிப்பாண்டியன், முருகன், மூக்கையாப்பாண்டியன், பரமையா, முத்துராமலிங்கம் ,துரை, நவமணி பாபு ,அந்தோணி, பொன்ராஜ், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அழகியநம்பி, ராஜதுரை, சிவா, கோட்டப்பாண்டி, சிங்கத்துரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

செம்பனார்கோயிலில், மணிப்பூர் வன்முறையை கண்டித்து

# காங்கிரஸ் கட்சியினர் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம்



செம்பனார்கோயில், ஜூலை.28: பாஜக ஆளும் மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடியின பெண்களை நிர்வாணப்படுத்தி பாலியல் வன்கொடுமை செய்தவர்களையும், இதனை தடுக்க தவறிய ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும், மயிலாடுதுறைமாவட்டம் தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோயில் மேலமுக்கூட்டு கடைவீதியில் பூம்புகார் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ்கமிட்டிசார்பில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு காங்கிரஸ்கமிட்டிநிர்வாகி சொக்கலிங்கம் தலைமை வகித்தார். வட்டார தலைவர் வேணுகோபால் வரவேற்றார். இதில் மயிலாடுதுறை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவரும், மயிலாடுதுறைசட்டமன்ற உறுப்பினருமான ராஜகுமார் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கட்சியினர் மெழுகுவர்த்தி ஏந்தி, மணிப்பூர் வன்முறையை கண்டித்தும், இதனை தடுக்க தவறிய ஒன்றிய அரசை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பினர். பின்னர் மணிப்பூரில் இறந்தவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதில் வட்டாரத் தலைவர்கள் சீனிவாசன், கார்த்திகேயன், ஜம்பு கென்னடி, பரதன் ரவிச்சந்திரன், கோவி.மதிவாணன், செந்தில்குமார், நகர தலைவர் சம்பந்தம் மற்றும் கட்சி தொண்டர்கள் நிர்வாகிகள் திரளாக பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் நகைக்கடையில்

# வாடிக்கையாளர் போல நடித்து 6 பவுன் நகையுடன் டிப் டாப் பெண் தப்பி ஓட்டம்

காஞ்சிபுரம், ஜூலை 28, காஞ்சிபுரம் மேட்டுத்தெரு அருகேயுள்ள வள்ளல் பச்சையப்பன் தெருவில் அசோக் என்பவர் தங்கநகை கடை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் இருசக்கர வாகனத்தில் வந்த இளம்பெண் கடையில் நுழைந்து நகையை வாங்குவது போல் பல்வேறு நகைகளை பார்த்து கொண்டிருந்தார். கடை உரிமையாளரை திசை திருப்பிவிட்டு 48 கிராம் எடையுள்ள 2 தங்கச்சங்கிலியை எடுத்துக்கொண்டு கடைக்கு வெளியே நிறுத்தி வைத்திருந்த இருசக்கர வாகனத்தில் கண்ணிமைக்கும் நேரத்தில் தப்பிச்சென்று விட்டார்.

இது குறித்து விஷ்ணு காஞ்சீ போலீஸ் நிலையத்தில் தகவல் அளித்ததன் பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் வெற்றிச்செல்வன் சம்பவ இடத்தில் ஆய்வு மேற்கொண்டு கண்காணிப்பு கேமரா காட்சிகளை கொண்டு அந்த இளம் பெண்ணை தேடி வருகின்றனர்.

மயிலாடுதுறை மாவட்டம் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் புதிய நிர்வாகிகள்

# டாக்டர் அம்பேத்கர் மற்றும் தந்தை பெரியார் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



சீர்காழி, ஜூலை,28 விடுதலைசிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் கட்சியில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள மாவட்டசெயலாளர்கள், மற்றும் மண்டல செயலாளர்கள், மண்டல துணை செயலாளர் புதிய பொறுப்பாளர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளார்.


இந்நிலையில் மயிலாடுதுறைமாவட்டம் சீர்காழி புதிய பேருந்து நிலையம்அருகில் டாக்டர் அம்பேத்கர் மற்றும் தந்தை பெரியார் உருவசிலைக்கு மயிலாடுதுறை வடக்கு மாவட்ட செயலாளர் தாமு. இனியவன், நாகை மண்டல செயலாளர் அறிவழகன், நாகை மண்டல துணை செயலாளர் காமராசு ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

முன்னதாக புதிதாக பொறுப்பேற்றுள்ள மயிலாடுதுறை வடக்கு மாவட்டசெயலாளர்தாமு. இனியவன், முன்னாள் மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரனிடம்வாழ்த்து பெற்றார்.

பின்னர் விடுதலை சிறுத்தை கட்சி பொறுப்பாளர்கள் பேரணியாக சென்றனர். இதில் மாவட்ட செய்தி தொடர்பாளர் தேவா, வணிகர் அணி மாநில துணை செயலாளர் விஜயரங்கன், அரசு ஐக்கிய பேரவை மாவட்ட அமைப்பாளர் உலக கனிவண்ணன், நகர செயலாளர் இனிய தமிழன், நகர பொருளாளர், கிறிஸ்துவ மாவட்ட அமைப்பாளர் ஆசைதம்பி, மகளிர் மாவட்ட செயலாளர் ஞான வள்ளி, கவுன்சிலர் காமராஜ் உள்ளிட்ட விடுதலை சிறுத்தை கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டையைச் சேர்ந்த

# புகழ்பெற்ற ஓவியர் கலைமாமணி மாருதி காலமானார்



புதுக்கோட்டை ,ஜூலை,28 புகழ்பெற்ற ஓவியக் கலைஞர் ரெங்கநாதன் என்கிற மாருதி நேற்று மதியம் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள புனேயில் அவரது மகள் வீட்டில் காலமானார். அவருக்கு வயது 86. அவர் ஆகஸ்ட் 28ம்தேதி 1938ஆம் வருடம் புதுக்கோட்டையில் பிறந்தார். இவரது பள்ளிப்படிப்பு புதுக்கோட்டை நகரில் உள்ளபள்ளியிலும்,கல்லூரி படிப்பு புதுக்கோட்டை மாமன்னர்கல்லூரியிலும் பயின்றார்.

ஓவியத்தின் மீது தனக்கு உள்ள ஆர்வத்தை வெளிப்படுத்த ஏதுவாக தனது 21வது வயதில் சென்னைக்கு சென்றார். அங்கு முதலில் சினிமா போஸ்டர்களுக்கான பணிகளை செய்து வந்தார். அதன் பிறகு, முதன்முதலாக குமுதம் பத்திரிகையில் வெளிவரும் கதைகளுக்கு ஏற்ற ஓவியம் வரைந்துதரும் பணியில் சேர்ந்து நிறைய ஓவியங்களை வரைந்தார். தொடர்ந்து குங்குமம், ஆனந்தவிகடன், கண்மணி உள்ளிட்ட பத்திரிக்கைகளின் ஆஸ்தான ஓவியரானார்.


அவரின் முதல் ஓவியம் 21.04.1959 அன்று குமுதம் பத்திரிகையில் வெளியானது. அன்று முதல் இன்று வரை பல ஆயிரக்கணக்கான ஓவியங்களை வரைந்து ஓவியத்துறைக்கு பெருமை சேர்த்தார். கலைஞர் கருணாநிதி தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோது மன்னர் இராஜராஜனின் 1000வது சதயவிழாவின் போது இவரின் பணி மிகவும் குறிப்பிடத்தக்கது.

இவரின் ஓவியத் திறமையை பாராட்டும் வகையில் தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது வழங்கி கௌரவித்தது. புதுக்கோட்டையில் பிறந்துஉலகப்புகழ்பெற்ற ஓவியராய் திகழ்ந்து, பல ஓவியங்களை உயிருள்ள ஓவியமாக படைத்த மிகச் சிறந்த கலைஞர் வயது மூப்பின் காரணமாக நேற்று காலமானார்.

அவரது மறைவு ஓவிய உலகிற்கு பேரிழப்பாகும். அவரிடம்ஓவியம்பயின்ற மாணவர்கள் இன்று உலகின் பல இடங்களில் இருந்தாலும் சோகத்தில் ஒன்று சேர்ந்து கலங்கியுள்ளனர். ஓவியர் மாருதியின் உடல் இன்று காலை புனேயில் நல்லடக்கம் செய்யப்பட உள்ளது.

ரவுடியை பிடிக்க முற்படும் போது

# போலீசாரை பணி செய்யவிடாமல் தள்ளிவிட்டு தடுத்த ரவுடி உட்பட 3 பேர் கைது







சென்னை,ஜூலை,28 சென்னை காசிமேடு பகுதியை சேர்ந்த பி பிரிவு ரவுடியான சஞ்சய் என்பவர் இவன் மீது பல வழக்குகளில் நீண்ட நாட்களாகபோலீசாரிடம் பிடிபடாமல் இருந்து வாழ்ந்து வந்தான்

இந்நிலையில் ரவுடி சஞ்சய்காசிமேடுபகுதியில் சுற்றிக்கொண்டிருப்பதாக தனிப்படை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைக்கவே அவரை பிடிக்க போலீசார்சென்றபோது

போலீசாரை பார்த்த சஞ்சய் போலீசாரை தள்ளிவிட்டு தப்பியோடியுள்ளான் அவரை விரட்டி சென்று போலீசார் பிடிக்க முற்பட்ட போது அவருடைய உறவினர்களான நரேஷ் மற்றும் வெங்கடராமன் இருவர் போலீசாரை தடுத்து நிறுத்தி பணி செய்யவிடாமல் வாக்குவாதம் செய்துள்ளனர்.

இருந்தபோதும் போலீசார் சஞ்சயை பிடித்து காவல் நிலையத்தில் அழைத்து சென்றனர் இதனையடுத்து போலீசாருடன் வாக்குவாதத்தில்ஈடுபட்ட நரேஷ், வெங்கட்ராமன் மற்றும்ரவுடி சஞ்சய் ஆகிய மூவரையும் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்

சென்னை காசிமேட்டில் செல்போனுக்காக வாலிபர் கொலை

# குடிபோதையில் உளறி கொட்டிய இளைஞர்கள் இருவரை போலீசார் கைது செய்தனர்





காசிமேடு,ஜூலை,28 சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் குடி போதையில் இருந்த இரு இளைஞர்கள் ஒருவரை அடித்துகொலை செய்து விட்டு அவன் உயிரோடு இருக்கிறானா என இருவரும் பேசி கொண்டு சென்றனர்.

இதனை காதில் கேட்ட மீனவர் ஒருவர் காசிமேடு மீன்பிடி துறைமுகம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

இதனையடுத்து காசிமேடு மீன்பிடி துறைமுகம் பைபர் படகுகள்கட்டும்இடத்தில் சுமார் 45 வயது மிக்க அடையாளம் தெரியாத ஆண் சடலம் இருப்பதாக போலீசார்க்கு தெரிய வந்தது

உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணையில் இறங்கினர் அப்போது பழை வார்ப்பு பகுதி அருகே கப்பல் கட்டும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு இரு இளைஞர்கள் குடித்து விட்டு குடிபோதையில் இருந்ததாகவும் தெரிவித்தனர்

இதனையடுத்து காசிமேடு அண்ணாநகர் குடிசை பகுதியை சேர்ந்த 21 வயதுடைய சாமுவேல், அதே பகுதியை சேர்ந்த 21 வயதுடைய சஞ்சய் இருவரை போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டதில் இருவரும் குடிப்போதையில் இருந்த போது அவ்வழியாகவந்த 45 வயதுடைய வரிடம் செல்போனை பறிக்க முயன்றனர்செல்போனை கொடுக்க மறுத்ததால் அவரை கல்லால் தலையில் அடித்து கொலை செய்து விட்டு கடலில் வீசி சென்றது விசாரணையில் தெரிய வந்தது இதனையடுத்து கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தபட்டபின்சிறைக்கு அனுப்பபட்டனர்

ஒருசெல்போனுக்காக அடையாளம் தெரியாத நபரை கல்லால் தலையில் அடித்துக் கொலை செய்து விட்டு கடலில் வீசி சம்பவம்காசிமேடு பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

தொடர்ச்சியாக நடைபெறும் விபத்து

# புதுக்கோட்டை கருவேப்பிலான் கேட் பகுதியில் உயர் கோபுரம் மின்விளக்குகள் அமைக்கப்?



புதுக்கோட்டை புதுக்கோட்டை திருச்சி சாலையில் கருவேப்பிலான் கேட் பகுதியில் விபத்துகளை தடுக்கும் வகையில் ஒளிரும் மின்விளக்குகள் மற்றும் பேரிகாடுகள் நிறுவப்பட்டது. புதுக்கோட்டை - திருச்சி சாலையில் கருவேப்பிலான் கேட் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலை சந்திக்கும் பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் உயிரிழப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சில தினங்களுக்கு முன் நடந்த விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அந்த பகுதியில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அந்தப் பகுதியில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்க வேண்டும், வேக கட்டுப்பாடு பேரிகார்டுகள் மற்றும் ஒளிரும் மின்விளக்குகள் அமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இதனைத் தொடர்ந்து திருக்கோகர்ணம் காவல்துறை மற்றும் 9ஏ நத்தம் பண்ணை ஊராட்சி மன்ற தலைவர் ஏவிஎம் பாபு மற்றும் அந்த பகுதியைச்சேர்ந்தபாஸ்கர், சூர்யா, பழனியப்பன் ஆகியோர் ஒன்றிணைந்து வாகனங்களின் வேகத்தை குறைக்கும் வகையில் ஒளிரும் மின் பேரிகார்டுகள் வைத்தனர்.

மேலும் அந்தப் பகுதியில் விபத்துக்கள் தொடரா வண்ணம் எம்எல்ஏ மற்றும் எம்பி நிதியில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்க வேண்டும் மாவட்ட நிர்வாகம் மற்றும் போக்குவரத்துகாவல்பிரிவு சார்பில் வேகத்தடைகள் நிறுவப்பட வேண்டும் போதுமானபோக்குவரத்து போலீசார்கள் நியமிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வைத்தனர்.

# அறந்தாங்கியில் பிரசித்தி பெற்ற வீரமாகாளியம்மன் கோயிலில் இரண்டாம் நாள் தேரோட்ட திருவிழா நேற்று மிக விமர்சையாக நடைபெற்றது





அறந்தாங்கி ,ஜூலை,28 புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் அமைந்துள்ள வீரமாகாளியம்மன் கோயில் அப்பகுதி மக்களின் காவல் தெய்வமாக திகழ்கிறது. இக்கோயிலின் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் மிகவும் விமர்சையாக நடைபெறுவது வழக்கம். இந்நிலையில் திருப்பணி வேலைகள் செய்து குடமுழுக்கு விழா நடைபெற்றதால் கடந்த ஐந்து ஆண்டுகளாக இக்கோயிலின் திருவிழா நடைபெறாத நிலையில் ஐந்து ஆண்டுகளுக்கு பின் இந்த ஆண்டு இக்கோயிலின் திருவிழா கடந்த 10 நாட்களாக விமர்சையாக நடைபெற்று வருகிறது.

15 நாட்களுக்கு முன்பு பூச்சொரிதல் விழா நடைபெற்ற நிலையில் அதன் பின்பு கடந்த 18ஆம் தேதி காப்பு கட்டுதல் விழாவுடன் திருவிழா மிக விமர்சையாகதொடங்கி விழாவின் முக்கிய நிகழ்வான முதலாம் நாள் தேரோட்ட திருவிழா புதன்கிழமை நடைபெற்ற நிலையில் இரண்டாம் நாள் தேர் திருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் கரகோஷத்தோடு நேற்று நடைபெற்றது.

தமிழகத்திலேயே வேறு எங்கும் இல்லாத வகையில் இக்கோயில் மட்டுமே இரண்டு நாட்கள் தேரோட்டம் திருவிழா நடைபெறும் நிலையில் இரண்டாவது நாளான நேற்று பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து வந்து பக்தி பரவசத்தோடு அம்மனை வழிபட்டனர். மா, பலா, வாழை என முக்கனிகள் மற்றும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட வைரத்தேரில் வீரமாகாளியம்மன் வீற்றிருக்க ஆடி அசைந்து தேர் பவனி வந்த நிலையில் அந்த தேருக்கு முன்னால் இளைஞர்கள் ஆடிப்பாடி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய நிகழ்வு காண்போரை கவர்ந்தது.

முதலாவது நாள் புதன்கிழமைநடைபெற்ற தேரோட்டத் திருவிழாவில் தேர் நிலை நின்ற இடத்தில் இருந்து தொடங்கி பாரம்பரியமாக நிலைநிறுத்தப்படும் இடத்தில் தேர் நிறுத்தப்பட்ட நிலையில் நேற்று இக்கோயிலில் இரண்டாவது நாளாக தேரோட்டத் திருவிழா மிக விமர்சையாக நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற தேரோட்டதிருவிழாவில் அறந்தாங்கிமற்றும்அதன் சுற்றுவட்டார பகுதி கிராமங்களை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று இந்த ஆண்டும் நல்ல மழை பெய்து வேளாண்மை செலிக்கவும் அதேபோல் நோய் நொடி இன்றி மக்கள் வாழவும் வேண்டி கூட்டு வழிபாட்டு பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

முன்னதாக பெரியபள்ளிவாசல் முன்பு ஜமாத்தலைவர் சேக் அப்துல்லா தலைமையில்முத்தவல்லி அலிசேக், பொருளாளர் முகமதுசித்திக்,ஜமாத் துணைத் தலைவர் கிரீன்முகமது மற்றும் இஸ்லாமியர்கள் ஒன்று சேர்ந்து திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு குளிர்பானம் வழங்கிய நிகழ்வு மத நல்லிணக்கத்தை எடுத்துக்காட்டும் வகையில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. புதுக்கோட்டை. மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றாக திகழும் இந்த வீரமாகாளியம்மன் கோயில் தேரோட்ட திருவிழாவை முன்னிட்டு 200க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.





# ‘என் மண், என் மக்கள்’ யாத்திரை இன்று ராமேஸ்வரத்தில் தொடங்குகிறது

# நாளைய தினம் மணிப்பூர் செல்கிறது இண்டியா எம்.பி.க்கள் குழு





# லட்சக்கணக்கான புத்தகங்களுடன் 6-வது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா இன்று துவக்கம்


சென்னை / புதுக்கோட்டை | 28.07.2023 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் , இந்தியத் திரைப்பட தயாரிப்பாளர், இயக்குனர் (பி.1907) (இ.1979)



தனுஷ் , தமிழகத் திரைப்பட நடிகர் (பி.1983)



## இன்றைய நினைவு நாள்

சாரு மசூம்தார் , இந்தியச் செயற்பாட்டாளர் (பி.1918) (இ.1972)



சா. கணேசன் , தமிழக அரசியல்வாதி, சமூக ஆர்வலர், தமிழ் இலக்கியவாதி (பி.1908) (இ.1982)



கா. ஸ்ரீ. ஸ்ரீ , தமிழக எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் (பி.1913) (இ.1999)



## உலக இயற்கை வளம் பாதுகாப்பு நாள்

## உலகக் கல்லீரல் அழற்சி நாள்